

# அமரர் பொன்னம்பலம் இராசமணி


அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

20.06.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

உதிரத்தை உருக்கி

உயிர் காத்து

எமை வளர்த்து ஊண் உறக்கம்

தான் மறந்து எம்மை உண்ண

வைத்தும் உறங்கவைத்தும்


உலகறிய உயர வைத்த

உன்னத தாயின் காலடியில்

கண்ணீர் துளிகளோடு

இம் மடலை

காணிக்கையாக்குகின்றோம்.



இவ்வண்ணம்

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்தும் மறையாது மனங்களில் நிறைந்தவர்



# அமரர்
# பொன்னம்பலம் இராசமணி

அன்னை மடியில்
24.11.1939

ஆண்டவன் அடியில்
21.05.2013

## திதி நிர்ணய வெண்பா

சீர்விஜய வருடத்து சேர்மாதம் வைகாசியில்
பூர்வபக்க துவாதசியே! பொற்திதியாம்! – பார்போற்ற
பொன்னம்பலம் இராசமணி பொன்னான வாழ்வுநீத்து
பொன்னடிகள் பற்றியதே பேறு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# திரு செல்லையா பொன்னம்பலம்

தோற்றம்
20.07.1931

மறைவு
25.12.1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமுறைப் பாடல்கள்



## விநாயகர் துதி

முன்னவனே! யானை முகத்தவனே! முத்தி நலம்
சொன்னவனே! தூய மெய் சுகந்தவனே! - மன்னவனே
சிற்பரனே! ஐங்கரனே! செஞ்சடையாம் சேகரனே!
தற்பரனே நின் தாள் சரண்.

## தேவாரம்

அரும் துணையை அடியார் தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல் ஞானத்துள் தோன்றி
வரும் துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான் புலங்கள் அகத்தடக்கி மட வாரோடும்
பெரும் துணைமேல் வரும் பயனைப் போகமாக்கிப்
பொதி நீக்கித் தனை நினைய வல்லோர்க்கு என்றும்
பெரும் துணையைப் பெரும் பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

## திருவாசகம்

தந்ததுன் தன்னைக் கொண்ட தென்றன்னை
சங்கரா ஆர் கொலோ சதுரர்
அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்ற தொன்றென்பால்
சிந்தையே கோயிலாகக் கொண்ட எம்பரனே
திருப் பெரும் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோ கைமாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஏக நாயகனை இமையவர்க் கரசை
என் உயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனை புயல்வனற் கருளிய
பொன்னொடும் சிவிகையா கூர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி மிழலை
விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை அன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்குக்
காட்செய் மென் குழாம் புகுந்
தண்டங்கடந்த பொருளை வில்லதோ
ரானந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் மென்றுமுள்ள பொருளன்றே
பல்லாண்டு கூறிடுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன்
அடிக்கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனை நான் நினைந்தருள் பெறுவேனோ
இபமா முகந்தனுக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்த சற் குருநாதா
திருவாவினங் குடிப் பெருமாளே.

# வாழ்த்து

வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பி அன்பர் விளங்குக
சைவ நன்நெறி தாழ் தழைத்தோங்க
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



தொல்லையிரும் பிறவிச் சூழுந்தலைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரர் எங்கோன்
திருவாசக மென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்ல
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள் மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்தும் மண்நிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்ல அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இல்லாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆறா அமுதே அளவிலாப் பொம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்குஅரிய நோக்கே நுணக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தில் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ துதிகள்

## முடிக்கொற்றாவத்தை பிள்ளையார்

| | | | |
|---|---|---|---|
| வடிவுறும் | வதனமும் | வரம்தர | கரமைந்தும் |
| விக்கினம் | தீர்த்தருள | ஏகதந்த | மூலவனாய் |
| முடிக்கொற் | றாவத்தை | பதியாளும் | மூத்தவனே! |
| முன்னின்று | செயலாற்ற | வெற்றிகள் | தருபவனே! |
| மிடிவரும் | போதினிலே | மனதினில் | நினைத்திட |
| மீக்குயரும் | நின்தல | வாசல்தனை | வந்துற்றுன் |
| அடிகளே | பணிந்து | வணங்கிய | எமதன்னை |
| அகிலமதை | துறந்துமே | வருகின்றார் | கதியளிப்பாயே. |

## மருதந்தெணி மகாமாரி அம்மன்

| | | | |
|---|---|---|---|
| கருதிடும் | வேளைதனில் | மெய்சிலிர்க் | குமம்மா! |
| கண்களில் | நீர்மல்கும் | தாயேமகா | மாரியம்மா! |
| மருதந் | தெணியமர் | மங்கள | நாயகியே! |
| மாந்தரை | காத்திட | சூலமும் | தாங்கியவளே! |
| மருதந்தெணி | உன்னீற்றை | தினமும் | பூசிவந்துமே |
| மனதார | வணங்கிய | எம்குல | விளக்காளும் |
| அருமையுற | வாழ்வுதனை | வையகத்தில் | நீத்துமே |
| ஆத்மநிலை | தேடியுன்னடி | வருகின்றார்! | அணைத்திடம்மா! |

## பண்டாரி அம்மன்

| | | | |
|---|---|---|---|
| கற்றவர் | சான்றோரென | உயர்நிலை | ஆனோரும் |
| கனிந்திட | பேசிடும் | அந்தணர் | சூழவரும் |
| பொற்பதி | பண்டாரி | அம்மாவுன் | தலமதிலே |
| பொன்னிகர் | செயல்களும் | சாட்டிடும் | தெய்வமே! |
| பற்றோடும் | வருமடியார் | மனதறிந்து | அருள்பவளே! |
| பரமனின் | பாகமாய் | அமர்ந்திட்ட | மகாசக்தியே |
| உற்றதொரு | துணையென | உன்னையே | வணங்கிய |
| உத்தமியாம் | எம்தாயின் | ஆத்மாவை | சேர்த்திடம்மா! |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லிபுர ஆழ்வார்

| | | | |
|---|---|---|---|
| ஏற்றியுனை | புகழ்பாடும் | பண்ணிசை | ஓதுவார்களும் |
| ஏற்றிடுவார் | வினைபோக்கும் | சங்குடனே | சக்கரமும் |
| நாற்றிசை | மணல்தனிலே | தீர்த்தக் | கேணிகளுடன் |
| நல்லமுது | படைத்திடும் | ஆழ்வார் | மடங்களும் |
| தோற்றிடும் | வல்லிபுர | பதிமேவும் | நாராயணனே! |
| தேடியுனை | வந்துதொழும் | அடியவனாம் | எம்தாயும் |
| பேற்றினால் | நிறைவுகண்டு | இவ்வுலகை | விட்டகன்று |
| பதவினை | நாடிவருகிறாள்! | மேல்நிலை | கொடுப்பாயே! |

## கண்ணகை அம்மன்

| | | | |
|---|---|---|---|
| வையகமும் | நீதியின்பால் | வளம்பெறவே | நின்றவளே! |
| வானவரும் | ஒருகணம் | உடைறந்துமே | போனதே! |
| மெய்யுருகி | போனதே | மேன்மைகொள் | அந்தணரும்! |
| மன்றுதனில் | நீதிகேட்டு | வென்றிட்ட | தெய்வமே! |
| பொய்யுரை | மன்னவனும் | பிழையுணர | செய்தவளே! |
| பொற்பாக | பதியமர | பேறுற்றோமே! | மாநகரில் |
| மெய்யிருத்தி | களைத் | தொழுதவெம் | தூயவளும் |
| மேன்மைநிறை | வாழ்ந்தகன்று | வருகின்றாள் | சேர்த்திடம்மா! |

## நாவற்கலட்டி அம்மன்

| | | | |
|---|---|---|---|
| உக்கிர | நோய்பிணிகள் | உனைக்காண | போய்விடுமே! |
| உலகமும் | உன்வசமாய் | என்றுமே | அடங்கிடுமே! |
| தக்கவளாய் | நாவற் | கலட்டியுறை | அம்மாவே! |
| தகுவழி | சேர்ந்திட | தாயாகி | நிற்பவளே! |
| விக்கினங்கள் | விலகியோட | வேப்பிலையும் | திருநீறும் |
| வீசியெம் | இடர்யாவும் | நீக்கிடும் | நாயகியே |
| எக்கணமும் | உந்தனையே | மனதிருத்தி | உன்வாசலை |
| ஏற்றமுற | தொழுதவெம் | அம்மாவை | ஏற்றிடம்மா! |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வச்சந்நிதி முருகன்

செந்தமிழ் மணங்கமழ தொண்டைமான் ஆண்டபதியும்
செழிப்புகள் மிகநிறை செல்வச் சந்நிதியிலே!
கந்தாவுன் ஆலயமும் அழகினை தந்திடவே
காலங்கள் தவறாது நேர்த்தியுடன் பூசைகளும்
விந்தையில் நடந்தோ பக்தர்களும் கூடுவார்களே!
வணங்கிட பலன்தரு உன்தல வாசலிலே!
சிந்தையிலே பக்தியுடன் தொழுதிட்ட எமதன்னையும்
சீரியநிலை தேடியுன்னடி வருகின்றான் காத்திடுவாயே!

## ஞானவைரவர்

காவலனாய் கண்திறக்க முன்னிற்கும் ஞானவைரவரே
கருத்தினில் வைத்துனை நாளும் தொழுவோமே!
ஆவல்மேவிட அனைத்துவகை பண்டங்களும் மடைபரவி
அன்னதானமும் செய்வோமே! அன்பினாலே ஏற்றிடுவாயே!
நாவினில் உனையன்றி வேறொன்றும் இல்லையப்பா!
நலிந்திடும் எண்ணங்களை நேர்த்தியுற வைப்பவனே!
சேவடிகள் தொழுதிடன் தினமுன்னை காணவந்த
செல்வத் திருமகளாம் அம்மாவை காத்திடுவாயே!

# சோக உணர்வுகள்

## சகோதரர்கள்

சோதரியே எங்கள் உதிரத்தில் கலந்திட்ட
சோபிதக் குயிலே! பாடிப் பறந்திட்ட
மாதரசியே! மகிழ்வாக எம்மோடு வாழ்ந்திட்ட
மனங்கவர் இல்லத் தரசியான செல்வமே!
ஆதரவாய் ஆலோசனை கூறிடும் வேளைதனை
அன்றிலிருந்து மீட்டுப் பார்க்கிறோம்! முடியவில்லை
தீதறியா உந்தனையோ காலனவன் கவர்ந்தானோ!
தீயுடனே சங்கமிக்க என்னவேதனை பட்டோமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன் கெஜதீஸ்வரன் - இங்கிலாந்து

எத்தனை ஜென்மங்கள் நானெடுத்தாலும் மாறாதம்மா
எனக்குயிர் தந்தவுன் திருமுகம் காணாதது!
வித்திட்டு நீரூற்றி விளைநிலமாய் இருந்தவளே!
விக்கினங்கள் பலசுமந்து எமையாளாக்கி வளர்த்தவளே!
பத்துத் திங்களுக்கு ஈடாக எதுவுமில்லையே!
பரிவுடனே கொள்ளியிட்டு கடமைகளை செய்வதாலன்றி!
கத்தியிங்கு அழுதென் மனதைத் தேற்றினாலும்
கடன் தீர்க்க வழியின்றி நோக்கின்றேனே!

# பேரப்பிள்ளைகள்

மெத்தையென உன்மடியை கண்டோமே முதலிலே
மகிழ்வாக நாமுறங்க கதைபலவும் பகருவாயே
வித்தைபல நாமறிய நற்குருவாகி கற்பித்தவளே!
வெற்றிகளை பெற்றிடவும் கல்வியிலே உயர்ந்திடவும்
வேண்டுவாயே தெய்வங்களை நேர்த்தியுடன் நோன்பிருந்து!
வற்றாத ஜீவநதியாய் தாகம்தீர்ப் பாயென்றிருக்க
உத்தமியே வார்த்தைகள் எதுவும் கூறாமல்
உன்னுயிர் எங்குற்றதோ பதிலொன்று தாருமம்மா!

# தேற்றம்

பூமலர்ந்து சருகாவதும் பூரணைதான் தேய்வதுவும்
பாமாலை பாடிடும் பக்தர்களும்! பூமாலைபோல்
வாடியொரு நாள்தனிலே வனப்பிழந்து மடிவருண்மை
தேடிடாது மானுடனே! தேறு.

ஆக்கம் :
அல்வாயூர் சி.கணேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற்பாக்கள்

## மக்கள்

முற்றத்து நிலவாக முன்னிற்கும் தெய்வமே!
முழுமதியாய் பிரகாசம் தந்திடும் அம்மாவே!
கற்றிட வைத்தெமை சான்றோராய் ஆக்கியவரே!
காத்திரமாய் அருகிருந்து வழிகாட்டி முன்னேற
பொற்பான ஆசிகளும் ஊக்கமும் தந்தவளே!
புண்ணியங்கள் செய்ததனால் நற்பேறும் பெற்றோமே!
பற்றுகள் மிகுந்துவர குதூகலித்து நாமிருந்தவேளை
பாவியவன் உயிர்பறித்து நிர்க்கதி ஆக்கிவிட்டானே!

## மருமக்கள்

மிதித்த புல்லென்றும் சாகாது உங்களாலே
மிட்டுமிசை ஒருகணம் நின்றதுவோ உங்களாலே!
விதியென்று சொல்வதா! என்றும் நோவதா!
வீடுவந்த எங்களை நட்டாற்றில் விடலாமோ!
கதியென்று நாம்வாழ்ந்த வேளைகளை அறிவாயே
கலக்கமின்று எமைச்சேர பாவமென்ன செய்தோமோ
மதிநிறைவால் ஆற்றிய செயல்களும் மறக்கலாமோ!
மாமியில்லா மனையின்று பாலைவனமாய் ஆனதுவோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லோகேஸ்வரன் குடும்பம்
# (ஜேர்மனி)

| | | | |
|---|---|---|---|
| சிகரமென | எமக்கெல்லாம் | புகழ்சேர | வைத்தவளே! |
| சிறப்பான | குடும்பமாய் | நாம்வாழ | நின்றவளே! |
| மகத்துவமே | கண்டோமே | வெளிநாட்டு | வாழ்வியலில் |
| மனக்குறை | ஏதுமில்லை | என்றிருக்க | சடுதியிலே |
| தகவல்தனை | பெற்றோமே | தொலைபேசி | வழியாக |
| தடுமாறிப் | போனோமே | உன்முகம் | காண்பதற்கு |
| மிகவிரைவாய் | செயற்பட்டு | இறைவனின் | கிருபையால் |
| முகங்கண்டு | கடமைசெய்து | நிறைவுற்று | பலனுற்றோமே! |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பொன்னம்பலம் இராசமணி அவர்களின் வாழ்வும் விழுமியங்களும்

'தக்கார் தகவிலர் என்பதெல்லாம் அவரவர்
எச்சத்தால் பெறப்படும்'. (வள்ளுவம்)

மண்ணுலக வாழ்வில் மனிதப் பிறவியெடுத்தவர்கள் வாழ்ந்தும் மடிந்தும் விடுவது இயற்கையாகும். இத்தகைய வாழ்வில் எத்தனையோ வேறுபாடுகள் ஏற்றத்தாழ்வுகள் என வித்தியாசம் வித்தியாசமான வாழ்க்கை முறைகள் என நாம் சமூகத்தில் தரிசிக்கின்றோம். இந்த வகையில் ஒரு நல்ல வாழ்க்கையினை நாம் மேற்கொண்டோம் என்பதற்கான அளவு கோலாகவே வள்ளுவன் மேலே கூறிய குறளைத் தந்துள்ளார். எங்களுடைய நிகழ்கால வாழ்வை மட்டுமல்லாது நமது அடுத்த தலைமுறை சார்ந்த சந்ததியினரின் வாழ்வில் விழுமியங்கள் அதனை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும். எனவே தான் அமரர் பொன்னம்பலம் இராசமணி அவர்களின் குடும்பம் சார்ந்த வாழ்வையும், விழுமியங்களையும் நோக்கலாம்.

மேலும் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலே அவர் வாழ்ந்த வளர்ந்த ஊர், குடும்பப் பின்னணிகள், வசதி வாய்ப்புக்கள் என இன்னோரன்ன காரணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன என்பதும் மறுக்க முடியாததொன்றாகும். அமரர் அவர்கள் யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறைப் பிரதேசத்தை சேர்ந்த புலோலி மேற்கு தென்னிங்கவத்தையில் உயர் சைவ வேளாண் குல மரபில் சோமசுந்தரம் செல்லாச்சிப்பிள்ளை தம்பதியினருக்கு **24.11.1939** இல் இரண்டாவது மகளாக அவதரித்தார். தாய் தந்தையர் இவருக்கு இராசமணி என்ற நாமத்தைச் சூட்டினார்கள். இவரின் உடன் பிறப்புக்களாக தங்கம்மா, இரத்தினம் ஆகிய இரு சகோதரிகளும் சிவபாதம் (நீர்ப்பாசனத்திணைக்களப் பணிப்பாளர் - வடமாகாணம்) எனும் சகோதரரும் உளர். தந்தையார் மரபுத் தொழிலாகிய விவசாயத்தில் அதிக ஈடுபாடு கொண்டுழைத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயார் கணவனுக்கேற்ற மனையாளாக இருந்து புலோலி மேற்கு சுற்றுவட்டத்துக்கேற்ப பிள்ளைகளைக் கல்வி கேள்விகளிலும் கவனஞ் செலுத்தி ஏற்றமுறச் செய்தார்.

"புலோலி மேற்கு" புலவர்களும் அறிஞர்களும் ஆக்க இலக்கிய கர்த்தாக்களும், அரச பதவியாளர்களும் விவசாயப் பெருமக்களும் நிறைந்த கிராமமாகும். அமரர் அவர்கள் கல்வியை யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்றுக் கொண்டார்.

அமரர் இராசமணி அவர்கள் பண்பிலே சிறந்த செல்லையா தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் இரண்டாவது புத்திரனானிய பொன்னம்பலம் என்பவரை **1962** கார்த்திகை மாதம் **11**ம் திகதி திருமணம் செய்து கொண்டார். பொன்னம்பலம் அவர்கள் ஒரு கூட்டுறவுப் பரிசோதகராகையால் வாழ்க்கையிலும் கூட்டுறவுத் தத்துவங்களின் அடிப்படையில் உன்னதமான வாழ்க்கையை இருவரும் மேற்கொண்டனர்.

இல்லறத்தின் பயனாக இவர்கள் தவமலர் , சிவனேஸ்வரன், லோகேஸ்வரன், புஸ்பமலர், ஜெகதீஸ்வரன், கோடீஸ்வரன் எனும் புதல்வர்களைப் பெற்று மகிழ்ந்தனர். பிள்ளைகளின் கல்விக்காகவும் உயர்ச்சிக்காகவும் உறுதுணையாகவும் பக்கபலமாகவும் இருந்தனர்.

அமரர் அவர்களின் மூத்த மகள் தவமலர் விஞ்ஞானப் பட்டதாரியாகி யா/வடஇந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியராகிய காலத்தில் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலை மேற்பார்வையாளராகிய செ.இராமச்சந்திரனுக்கு திருமணம் செய்து வைத்து விதுரா , உதயதர்ஷன் , தனுஷன் ஆகிய பேரப்பிள்ளை களையும்; சிவனேஸ்வரன் யா/வேலாயுதம் மகா வித்தியாலய தொழினுட்ப ஆசிரியராகி யா/ஹாட்லிக்கல்லூரியில் கடமையாற்றிய காலத்தில் அவருக்கு யா/கரம்பைக் குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியை வதனியைத் திருமணம் செய்து வைத்து துஷரா , மதுசிகன் ஆகிய பேரப்பிள்ளைகளையும் ஜேர்மனியில் தொழில்புரியும் லோகேஸ்வரனுக்கு யா/சிதம்பராக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியில் கடமையாற்றிய ஆசிரியை பிரபாவைத் திருமணம் செய்து வைத்து சிலக்ஷன், டிலோசன், மதிசா ஆகிய பேரப்பிள்ளைகளையும் , புஸ்பமலரை யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் பாடசாலை உதவியாளராக கடமையாற்றிய சிவகுமாரனுக்குத் திருமணம் செய்து வைத்து கீர்த்திகன், பிரபாகினி, லக்சனா ஆகிய பேரப்பிள்ளைகளையும் வர்த்தகராகிய கோடீஸ்வரனுக்கு ராதிகா என்பவரைத் திருமணம் செய்து வைத்து அனோஜன், சஞ்சிகா, வினுஜன் ஆகிய பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்ததுடன் இலண்டனில் தொழில்புரியும் ஜெகதீஸ்வரனுக்கு மணமகளைத் தேடிக் கொண்டிருந்தார்.

அமரர் அவர்களுடைய குடும்பம் எட்டுத்திசைகளிலும் பிள்ளைகளால் புகழ்பரப்பி, விழுதோங்கிப் பழுதாங்கும் குளிர்ச்சி பொருந்திய ஆலமரம் போல் உலகோர்க்கெல்லாம் உறுதுணையாக வாழ்ந்து கிராமத்தைச் சேர்ந்த ஆலயங்களின் திருப்பணிக்கெல்லாம் உதவிகள் பல செய்து, அறம் போற்றும் உத்தமியாக வாழ்ந்து நீதியிலே உயர்ந்து நின்று ஒழுக்கத்தில் உயர்ந்து அறிவுடையோராய் பிறர்க்குதவி செய்வோராய் பேச்சிலும் கருமமமாற்றுவதிலும் வல்லோராய் அமரர் பொன்னம்பலம் அவர்கள் வழியில் தானும் வாழ்ந்து பிள்ளைகளையும் அவ்வழி நடக்க வைத்த அன்னை இராசமணி அவர்கள் **20.05.2013** அன்று திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலி காரணமாக உடனடியாக வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டு வைத்தியர்களால் சிறந்தமுறையில் சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி **21.05.2013** இல் இறைவனடி சேர்ந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய வேண்டிப் பிரார்த்திப்போமாக. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர் என்பது உண்மையாகும்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பதினால் உண்டாகும் நன்மைகள் உங்களுக்குத் தெரியுமா?

1. ஒரு நாளைக்கு 30 நிமிடமளவில் நடப்பதனை மேற்கொள்பவர்களில் அரைப்பங்குக்கு மேலானவர்கள் நீரிழிவு நோயினால் பீடிக்கப்படுவதிலிருந்து தவிர்க்கப்படுவதுடன், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 70 வீதமானோர்கள் இந்நோய்த் தாக்கத்தின் அபாயத்திலிருந்தும் தவிர்க்கப்படுகின்றார்கள்.

2. நடப்பதினால் 25 வீதத்துக்கும் அதிகமானவர்கள் பக்கவாத நோய்த் தாக்கத்தின் அபாயத்திலிருந்து தவிர்க்கப்படுகிறார்கள்.

3. இருதயம், எலும்பு என்பன பலம்பெறுவதுடன் குருதிச் சுற்றோட்ட ஒழுங்கு முன்னேற்றமடைகிறது.

4. மார்பக புற்றுநோய்த் தாக்கத்திற்குள்ளாகிய பெண்கள் தினசரி கிரமமாக நடக்கும் பழக்கத்தை மேற்கொண்டால் இந்நோயினது தாக்கம் மீண்டும் ஏற்படாதிருப்பதுடன் இறப்பு வீதமும் 50 வீதத்திற்கு மேற்படாதிருக்கும்.

5. கிரமமாக நடப்பதனை வழக்கமாக கொண்டிருப்பவர்களுக்கு குடற்புற்றுநோய்த் தாக்கத்தின் அபாயம் 60வீதம் குறைவடைகின்றது.

6. புறொஸ்ரேற் புற்றுநோய் தாக்கத்திற்குள்ளான ஆண்களது இறப்புவீதம் 46 வீதத்திலும் குறைவானது என்பதனை ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

7. மனச்சோர்வு ஏற்படுவதுகூட நடப்பதினால் தடுக்கப்படுவதுடன் இவ்விதம் நடப்பதினை கிரமமாக மேற்கொள்பவர்கள்தமக்கு ஏற்பட்ட மனச்சோர்வில் முன்னேற்றங்களை காணக்கூடியதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. நடப்பதினை மேற்கொள்வதினால் சுரக்கப்படும் நரம்பு இரசாயன பதார்த்தங்களினால் உற்பத்திகள் (உடம்பிற்குத் தேவையான) மேலும் கூடியளவு உற்பத்தியாக்கப்படுகின்றன.

9. நடப்பதினை மேற்கொள்வது உயர்அடர்த்திக் கொழுப்புப் படிவங்களினை (கொலஸ்ரோல்) சிறப்பாக புறந்தள்ளுவதுடன் **HDL** கொலஸ்ரோல் உயர்நிலையில் உள்ளவர்களுக்கு மாரடைப்பு நோயின் தாக்கம் பக்கவாதம் என்பன ஏற்படுவதிலிருந்து பாதுகாக்கப்படுகின்றார்கள்.

# DIVISIONAL HOSPITAL, VALVETTITHURAI - LABORATORY PHOTO-METER NORMAL VALUES

| | |
|---|---|
| Fasting blood sugar | 75 - 115 mg/dl |
| Fasting Cholesterol | 160 - 229 mr/dl |
| Triglyceride | 10 - 190 mg/dl |
| HDL Cholesterol | 35 - 65 mg/dl |
| LDL Cholestrol | 120 - 190 mg/dl |
| Total CHO/HDLCHO | 3.0 - 5.0 mg/dl |
| Hemoglobin | 12 - 16 mg/dl |
| Creatinine | 0.6 - 1.1 mg/dl |
| Urea | 10 - 50 mg/dl |
| SGPT | 0 - 42 u/l |
| SGOT | 0 - 37 u/l |
| Alkaline phosphates | 60 - 306 u/l |
| Total Protein | 51 - 87 g/dl |
| Albumin | 41 - 61 g/dl |
| Albumin / Globulin Ratio | 1.1 - 2.0 |
| Tserum bilirubin | 0.25 - 101 mg/dl |
| Direct bilirubin | 0.01 - 0.25 mg/dl |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்புற்றுநோய் – சில தகவல் துளிகள்

## அறிமுகம் :

இலங்கையில் புற்றுநோயினால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. வாய் மற்றும் தொண்டைப் புற்றுநோய் அதிக அளவில், குறிப்பாக 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் ஏற்படுகின்றது. பெரும்பாலானோர் பிந்திய நிலையிலேயே சிகிச்சைக்காக வருகின்றனர்.

வாய்ப்புற்றுநோயானது இப்புற்றுநோயின் முன் நிலையில், அன்றில் ஆரம்ப நிலையில் இனம் காணப்பட்டால் அதற்கான குணம் அடையும் நோக்கிலான சிகிச்சையை வழங்க முடியும்.

## வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணிகள் :

வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதற்குப் பல பாதகமான காரணிகள் கண்டறியப்பட்டுள்ளன. அநேகமாக இக்காரணிகளில் ஒன்றோ அல்லது பலவோ சேர்ந்து செயற்படுவதன் பிரதிபலனாக வாய்ப் புற்றுநோய் ஏற்படுகின்றது. இந்தக் காரணிகளை இலகுவாக தவிர்க்க முடியும். எனவே வாய்ப்புற்றுநோய் ஏற்படும் சந்தர்ப்பத்தை பெருமளவு தவிர்த்து விட முடியும்.
நாக்கிலும் வாயிலும் ஏற்படும் சிவப்பு நிறம்) புற்றுநோய் ஆரம்பம்.

1. **பாதகமான பாவித்தல்**

சிகரட் , பீடி , சுருட்டு என்பன புகைப்பதனாலோ அல்லது புகையிலையை மென்று உண்பதினாலும் மூக்குப் பொடி பாவிப் பதனாலும் வாய்ப்புற்றுநோய் வர அதிக வாய்ப்பு உள்ளது.

2. **வெற்றிலை, பாக்கு பாவித்தல்**

வெற்றிலையுடன் பாக்கு, சுண்ணாம்பு மற்றும் புகையிலையை சேர்த்து மென்று சாப்பிடுதல் வாய்ப்புற்றுநோய் ஏற்பட ஏதுவாக உள்ளது. புகையிலை, பாக்கு என்பன வாய்ப்புற்றுநோயை ஏற்படுத்தும் முக்கிய காரணிகள், சுண்ணாம்பு புற்றுநோய் உண்டாவதைத் தூண்டும். காம்பு நீக்கிய வெற்றிலையை உண்பது பாதகம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **மதுபானம் அருந்துதல்**

சாராயம், புளித்த கள், கசிப்பு என்பன உட்கொள்வதனால் வாய், மற்றும் தொண்டைப் புற்றுநோய் ஏற்படும்.

4. **வாய்ச் சுகாதாரமின்மை**

வாய்ச்சுகாதாரம் இல்லாது இருந்தாலும், அத்தோடு வாயில் கிருமித் தாக்கம் ஏற்பட்டாலும் (மேக நோய், அழுகிய வாய்) வாய்ப்புற்றுநோயை ஏற்படுத்தும்.

5. **நீடித்த காலமான உராய்வு அல்லது உறுத்துதல்**

பாதிப்படைந்த பற்கள், கூரிய பற்கள், அசாதாரணமான வாய் மூடுதல், சூடான , உறைப்பான உணவு உட்கொள்ளல், மற்றும் நன்றாகப் பொருந்தாது இருக்கும் கட்டிய பற்களை அணிதல் என்பன வாய் உள்ளக மேலணியை தொடர்ந்து உறுத்துவதால் வாய்ப்புற்றுநோய் ஏற்படலாம்.

6. **சூரியனில் இருந்துவரும் பல கதிர்கள் மற்றும் ஓசோன்படலத்தில் உடைவால் பூமியை அடையும் காதகமான சூரியக் கதிர்கள்**

இது குறிப்பாக வெய்யிலில் வேலை செய்யும் விவசாயிகளில் உதட்டுப்புற்றுநோயை ஏற்படுத்தும்.

7. **சத்துள்ள உணவுப் பற்றாக்குறை**

விற்றமின் ஏ அதிக அளவில் வாய் உள்ளக மேலணியைப் பாதுகாக்கும். விற்றமின் ஏ குறைபாட்டால் வாய்ப்புற்றுநோய் ஏற்பட உதவி செய்யப்படுகின்றது.

8. **கவனிக்கப்படாதுள்ள வாய்ப்புற்றுநோய் அறிகுறிகள் :**

வாய் மேலணியினை உயர்த்து எனப்படும் அகற்ற முடியாத வெண்ணிற அல்லது செந்நிற தழும்பு கவனிக்காது விடப்படுமிடத்து வாய்ப்புற்றுநோயாக மாற்றமடைய அதிக வாய்ப்புக்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாய்ப்புற்றுநோய்க்கான எச்சரிக்கை அறிகுறிகள் :**

வாய் உள்ளக மேலணி நாக்கு மற்றும் உதடு என்பவற்றில் மாறாது இருக்கும் புண் இவை வலிமை அற்றவை.
சிவந்த அல்லது வெண்ணிறமான அகற்றமுடியாத படலம் தெரிதல்.
உணவு அரைத்தல் அல்லது விழுங்குவதில் கடினமாக இருத்தல்.
வாயில் கட்டி கன்னத்தில் கட்டி அல்லது வீக்கம் ஏற்படல். (இறுக்கமான அசைக்கமுடியாத கட்டிகள்)
கதைப்பதில் கஷ்டமாக இருத்தல்.

**வாய்ப்புற்றுநோய் தடுப்பு வழிகள் :**

பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை உண்ணாதிருத்தல்.
புகைப்பதைத் தவிர்த்தல்
மூக்குப்பொடி போடுவதைத் தவிர்த்தல்.
வாய்ச் சுகாதாரத்தைப் பேணுதல்.
மதுபானம் அருந்துவதைத் தவிர்த்தல்.
மாதத்திற்கு ஒரு முறை கண்ணாடியில் வாய் முழுவதையும் சுயபரிசோதனை செய்தல்.
வாய்ப்புற்றுநோய் முன்னிலையில் அல்லது மேற்கூறிய எச்சரிக்கைக் குறிகள் ஏற்படின் உடன் வைத்தியரை நாடவும்.
பல்லில் ஏதாவது மாற்றம் ஏற்படின் உடன் பல்வைத்தியரின் ஆலோசனையைப் பெறவும்.
பொருந்தாத பல்லை அணியாது இருத்தல்.
பச்சை நிற இலை வகைகள், மற்றும் மஞ்சள் நிறப் பழவகைகளை நிறைய உட்கொள்ளல்.

மேற்கூறிய பாதகமான காரணிகள் மற்றும் எச்சரிக்கை அறிகுறிகளை அறிவதன் மூலமும் நீங்கள் உங்கள் பழக்க வழக்கங்களை மாற்றி அப்பாதக காரணிகளைத் தவிர்ப்பதன் மூலமும் சந்தேகத்துக்கிடமான வாயில் ஏற்படும் மாற்றங்களை உடன் பல் வைத்தியரிடம் காட்டுவதனால் உங்களுக்கு வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். அல்லது ஆரம்ப நிலையில் கண்டறிய முடியும். இதனால் உங்கள் குணமடையும் நோக்கிலான சிகிச்சையை வழங்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து கொள்வோம்

01) அமெரிக்காவில் நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையம் செவ்வாயில் உயிரினங்கள் வாழ முடியுமென ஆய்வு செய்ய அனுப்பிய விண்கலங்களின் பெயர் என்ன?

| | |
|---|---|
| ஸ்பிரிற் | (2004ம் ஆண்டில்) |
| ஆப்ர் சுனிடி | (2004ம் ஆண்டில்) |
| பீனிக்ஸ் | (04.08.2007ம் ஆண்டில்) |

02) 195 நாட்கள் விண்வெளியில் தங்கியிருந்த பெண்மணி யார்?

சுனிதா வில்லியம்ஸ் (2007 யூன் 23ல் பயணம் நிறைவு)

03) சுனிதா வில்லியம்ஸ் பயணம் செய்த விண்கலத்தின் பெயர் என்ன?

அட்லாண்டிஸ் விண்கலம்

04) அட்லாண்டிஸ் விண்கலம் தரையிறங்கிய விமான நிலையத்தின் பெயர் என்ன?

எட்வேட்ஸ் விமான நிலையம் - கலிபோர்னியா

05) குளோனிங் மூலமாகக் கிடைக்கப்பெற்ற பிள்ளைகளின் பெயர் என்ன?

ஆதாம் - (ஆண்) . ஏவாள் - (பெண்)

06) 2019ம் ஆண்டு பூமியில் வந்து மோதும் என நம்பப்படுகின்ற விண்பாறையின் பெயர் என்ன?

2002 NT - 7

07) இந்தியாவின் முதலாவதுபெண் விண்வெளிப் பயணி யார்?

கல்பனா சாவ்லா

08) உலகில் மிக உயரமான மனிதர் யார்?

லியோன் ஸ்டட்னிக் (வயது 37) உக்ரேன் நாட்டவர் (8' 3")

09) தபால் அட்டையை முதன் முதலில் அறிமுகப்படுத்திய நாடு எது?

அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) பாம்புகள் இல்லாத நாடு எது?

அயர்லாந்து

11) பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் பூ எது?

குறிஞ்சிப்பூ

12) பதினைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் பூ எது?

லிம்பா பூ

13) ஐம்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் பூ எது?

காக்டஸ் பூ

14) ஈக்களுக்குப் பிடிக்காத வர்ணம் எது?

நீலம்

15) ஐரோப்பாவின் தொட்டில் என அழைக்கப்படுகின்ற நாடு எது?

சுவிட்சர்லாந்து

16) தண்ணீருக்கு அடியில் சென்று ஆராய்ச்சி செய்யப் பயன்படும் மூச்சுக் கருவியின் பெயர் என்ன?

ஸ்கூபா

17) முதலில் காகிதத்தினால் ரூபாய் நோட்டுக்களை அச்சிட்டு வெளியிட்ட நாடு எது?

சீனா

18) உலகிலேயே துணியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு எது?

ஸ்பெயின்

19) அஞ்சல் தலையில் தனது நாட்டின் பெயரைக் கொண்டிராத நாடு எது?

ஐக்கிய இராச்சியம்

20) தேசியக்கொடியினை முதன்முதலில் உருவாக்கிய நாடு எது?

டென்மார்க். 1219 இல்

21) விமானங்களில் உள்ள கறுப்புப் பெட்டியின் நிறம் என்ன?

மஞ்சள், செம்மஞ்சள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22) உலகில் நீண்ட காலம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் யார்?

அமரர்.மைத்திரிபால சேனநாயக்க

23) சார்க் நாடுகளின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?

மெற்சிறி ஜெயக்கொடி

24) இலங்கையிலிருந்து வெளிவரும் முதல் இணைய தமிழ்ச் சஞ்சிகையின் பெயர் என்ன?

சிறகு

25) பறக்கும் காரின் பெயர் என்ன?

ப்ளையிங் சோஸர்

26) ப்ளையிங் சோஸர் என்ற பறக்கும் காரை வடிவமைத்தவர் யார்? எந்த நாட்டவர்?

போல்மோலர். அமெரிக்கா

27) இலங்கையிலிருந்து தமிழில் வெளிவருகின்ற ஒரே ஒரு தகவல் தொழில்நுட்பச் சஞ்சிகையின் பெயர் என்ன?

(பீ.சீ.ரைம்ஸ்) P.C.Times

28) உலகில் எத்தனை நாடுகள் நிலப்பரப்பால் மட்டும் சூழ்ந்துள்ளன?

43

29) உலகில் எத்தனை நாடுகள் தனியே கடலால் மட்டும் சூழப்பட்டுள்ளன?

98

30) உலகிலேயே 14 இற்கு மேற்பட்ட நாடுகளுடன் தங்கள் எல்லைகளைப் பகிர்ந்து கொண்டுள்ள நாடுகள் எவை?

சீனா . ரஷ்யா

31) உலகப் புகழ்பெற்ற ரைம்ஸ் (Times) சஞ்சிகையின் முதன் முதலாக அதன் அட்டைப்படத்தை அலங்கரித்தவர் யார்?

நகைச்சுவை நடிகர் சார்லிசப்ளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*32)* *ரைம்ஸ் (Times) சஞ்சிகை எத்தனையாம் ஆண்டு எங்கு ஆரம்பிக்கப்பட்டது?*

1923ம் ஆண்டு அமெரிக்காவில்

*33)* *உலகின் மிகப்பெரிய சரக்கு விமானத்தின் பெயர் என்ன? தயாரித்த நாடு எது?*

அன்ரனோவ் - 225மரியா உக்கிரேன் (ஜனவரி 2008)

*34)* *உலகில் முதல் சமிக்ஞை விளக்கு எங்கு? எப்போது அமைக்கப்பட்டது?*

லண்டன் பாராளுமன்ற சதுக்கத்திற்கு அருகில். 1968இல்

*35)* *முதன் முதலாக திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?*

ஜி.யூ.போப்

*36)* *உலகின் விண்வெளி ஆய்வு நிலையத்தை அமைத்த நாடு எது?*

சோவியத் ரஷ்யா - 1971 (ஸல்யுட் -01)

*37)* *உலகின் முதல் விண்வெளிக் கப்பலின் பெயர் என்ன?*

கொலம்பியா (அமெரிக்கா - 1981)

*38)* *எவரஸ்ட் சிகரத்தை சென்றடைந்த முதல் தம்பதிகள் யார்?*

ஆண்ட்ரெஜ் மரிஜா ஸ்ட்ரெம்ப் பெல்ஜ்

(1990. ஸ்லோவேனியர்)

*39)* *பறக்கும் பறவைகளில் மிகப்பெரிய பறவையின் பெயர் என்ன?*

கோரி புஸ்டார்ட் (19kg வரை) ஆபிரிக்கக் காடுகளில் உள்ளது.

*40)* *தொடர்ச்சியாக ஒன்பது மணித்தியாலங்கள் பேசி உலக சாதனை புரிந்தவர் யார்?*

சிவஸ்ரீ.அழகு ஜெகதீஸ்வரதேசிகர்

(யாழ்ப்பாணத்தவர். செப்ரெம்பர்-01-2007)

*41)* *2007ல் அமைதிக்கான நோபல் பரிசு பெறுவோர் யார்?*

அமெரிக்காவின் முன்னாள் துணை ஜனாதிபதி

அல்கோர். ஐக்கியநாடுகள் சபையின் காலநிலை மாற்றக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42) இரு மாடிகளைக்கொண்ட உலகின் முதல் விமானத்தின பெயர் என்ன?

எயார் பஸ் 380

43) உலகிலேயே மிகப்பெரிய பயணிகள் விமானத்தின் பெயர் என்ன?

எயார் பஸ் (Air Bus - 380)

44) இந்தியாவில் எத்தனை மொழிகள் உள்ளன?

845 மொழிகள்

45) உலகில் மிகவும் புகழ்பெற்ற பானம் எது?

தேநீர் (சீனர்கள் கண்டுபிடித்தது)

46) உலகில் மிகப் பெரிய நாணயத்தை வெளியிட்ட நாடு எது? அதன் பெறுமதி எவ்வளவு?

சீனா. ஒரு லட்சத்து 44 ஆயிரத்து 400 ரூபாய் (144400/=)

(இந்நாணயத்தின் எடை 10 கிலோ ஆகும்)

47) உலகில் மிக உயரமான கலங்கரை விளக்கம் எது?

ஸ்டீல் டவர் (ஜப்பான்)

48) ஐஸ்லாந்து நாட்டில் உள்ள வால் இல்லா பூனைகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

மேக்ஸ்கேன்ஸ்

49) சாலைகள் அதிகமுள்ள நாடு எது?

அமெரிக்கா

50) ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் முதலாவது செயலர் யார்?

ட்ரிக்வி ஹாவ்தான் லீ (நோர்வே நாட்டவர்)

51) 18ம் நூற்றாண்டில் பகவத்கீதையை முதன் முதலில் மொழி பெயர்த்தவர் யார்?

சேர் வில்லியம் ஜோன்ஸ்

52) விண்வெளியில் பிறந்த கரப்பான் பூச்சியின் தாயின் பெயர் என்ன?

நடேஸ்டா (ஒக்டோபர் - 2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53) கரப்பான் பூச்சிகள் அனுப்பப்பட்ட செயற்கைக் கோளின் பெயர் என்ன?
போடோன்

54) விண்வெளிக்குச் சென்று திரும்பிய முதலாவது கோடீஸ்வரர் யார்?
டெனிஸ்டிட்டோ (அமெரிக்கா)

55) ஆசியாவில் உள்ள ஒரேயொரு கிறிஸ்தவ நாடு எது?
பிலிப்பைன்ஸ்

56) ஆசியாவில் உள்ள ஒரேயொரு இந்துசமய நாடு எது?
நேபாளம்

57) ஐக்கிய நாடுகள் பொதுச்சபையிலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?
தாய்வான் (முதன் முதலாக)

58) இலங்கையின் சிற்பக்கலையில் தனிச் சிறப்பைக் கொண்ட சிற்பவடிவம் எது?
சந்திரவட்டக்கல்

59) இலங்கையில் காணப்படாத தூபி வடிவங்கள் எவை?
பானை. தாமரை. நெல்லிக்கனி

60) மக்களின் விஞ்ஞானி என அழைக்கப்படுபவர் யார்?
தோமஸ் அல்வா எடிசன்

61) விஞ்ஞானிகளின் விஞ்ஞானி என அழைக்கப்படுபவர் யார்?
ஐன்ஸ்டீன்

62) இலங்கையின் சராசரி சனத்தொகை வளர்ச்சி வீதம் என்ன?
1.4 %

63) இலங்கையில் மிகச் சிறிய நிலப்பரப்புடைய மாவட்டம் எது?
கொழும்பு 1.1%

64) இலங்கையில் மிகப் பெரிய நிலப்பரப்புடைய மாவட்டம் எது?
அனுராதபுரம் 10.9%

65) இலங்கையின் பருமட்டான பிறப்பு வீதம் என்ன?
19.9 %



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்அஞ்சலி

மண்ணில்

24
*
11
*
1939







விண்ணில்

21
*
05
*
2013

எமது பாடசாலையின் ஆசிரியர் திரு.பொ.சிவனேஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார்

## அமரர் பொன்னம்பலம் இராசமணி

இன்றுகாலனின் பிடியில் சிக்கி
காற்றுடன் கலந்ததென்ன?
போனதுவோ? உம் பொன்வதனம்
ஆறிடுமோஎம் மனம் அம்மா?

சாந்திசாந்திசாந்தி

தாயாரின் மறைவினால்துயருற்றிருக்கும்
குடும்பத்தாருக்குஎமதுஆழ்ந்தஅனுதாபங்களைதெரிவித்துக்
கொள்கின்றோம்.

கிளி/தருமபுரம் ம.வி.
பாடசாலைச் சமூகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1939 | 2013 |
| 11 | 05 |
| 24 | 21 |



மெது பாடசாலையின் முன்னாள் ஆசிரியை திருமதி க.இராமச்சந்திரன் அவர்களின் அன்புத் தாயார்

## அமரர்.பொன்னம்பலம் இராசமணி

எண்ணித்தான் பார்க்கிறோம்
எப்படித்தான் ஆனதென்று
விழிநீர் கசிந்து விம்மி அழுகின்றோம்
அரும்பிய செந்தமிழ் தேன் பேச்சு எங்கே
கருவிழி கண்மூடிய காலத்தின் கோலமா இங்கே
சுடர்விட்டுப் பிரகாசித்த விளக்கு அணைந்ததுவோ
அழுது புரண்டாலும் ஆறாது எம் துயர்
விதியோ காலனின் சதியோ இறைவனே உன் பாதம் சேர்ப்பாய்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களின்
துன்ப துயரங்களில் நாமும் பங்கேற்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத் துயருடன்
யா/தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள்

அச்சமைப்பு: S.P.M பிறின்ரேர்ஸ்,வி.எம்.ரோட், பருத்தித்துறை. T.P.No: 0774966997, E.mail: puvan2009@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| மண்ணகம் | விண்ணகம் |
|---|---|
| 24 | 21 |
| 11 | 05 |
| 1939 | 2013 |

எங்கள் அன்புக்கினிய சிவகுமாரனின் பாசமிகு மாமியார்

## அமரர் பொன்னம்பலம் இராசமணி

கதிரைவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, பருத்தித்துறை.

ஒளி வீசும் உந்தன் திருவிதழும் இன்று
இருள் சூழ்ந்து போனதேனம்மா?
விழி சேய்களின் நலம் காத்து நிற்கும்
இனி உனைக் காண்பது எப்போதம்மா?
உறவுகள் போற்றி வாழ்ந்த
உத்தமியே உன்னை
மறந்திட நினைக்கமாட்டோம்
மனங்களில் நிலைத்து வாழ்ந்திருப்பாய்.......

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...

உடன்பிறவா குடும்பத்தவர்கள் [illegible] வீதி, பருத்தித்துறை.)
[illegible] குடும்பத்தவர்கள். ([illegible], பருத்தித்துறை.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு

24 * 11 * 1939



உதிர்வு

21 * 05 * 2013

எமது நிலையத்தின் முன்னாள் பொருளாளர் அமரர் செ.பொன்னம்பலம் அவர்களின் அன்புப்பாரியாரும்,
திரு.பொ.சிவனேஸ்வரன் (முன்னாள் பொருளாளர்), திரு.பொ.ஜெகதீஸ்வரன் (முன்னாள் நிர்வாக உறுப்பினர்),
திரு.பொ.யோகேஸ்வரன், திரு.பொ.கமலேஸ்வரன் (நிர்வாக உறுப்பினர்கள்) ஆகியோரின் பாசமிகு தாயாருமான

## அமரர். பொன்னம்பலம் இராசமணி

தாயென்ற ஓர் உறவை
தரணியில் இழப்பதென்பது
வாழ்வென்ற பூங்காவில்
வறண்ட நாட்களிதான்
வேரறுந்த மரங்களாய்
வேதனையில் உழல்கின்ற

இருக்கத்தின் இரத்தங்களே..!
விதிவழிதான் வாழ்க்கையென்ற
முன்னோரின் முதுரையை
மனதில் முன்னிறுத்தி
அன்னையின் நினைவோடு
அவனியில் நடைபயில்வீர்!

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாரின் துன்பதுயரங்களில்
நாமும் பங்கேற்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


என்றும் மாறாத் துயருடன்
திருநாவலூர் நாவலர் சனசமூக நிலையம்
திருநாவலூர் நாவலர் இளைஞர் பாலர் கல்வி நிலையம்
திருநாவலூர் விளையாட்டுக் கழகம்

அச்சுப்பதிப்பு: S.P.M ..., T.P.No: 0774066997, E-mail: ...n2009@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு."

எமது அன்புத் தாயாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றியவர்களுக்கும், பல வித கருமங்களை உடன் இருந்து உதவியவர்களுக்கும், நேரில் வரமுடியாத காரணத்தால் தொலைபேசி, தந்திமூலம் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும், அலுவலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்கும், கண்ணீர் அஞ்சலியைத் துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகை மூலம் வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், இறுதி நேரத்தில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் கடமை யாற்றிய வைத்தியர் தாதி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும், கிரியைகள் செய்த சிவாச்சாரியார்களுக்கும், இம் மலரினை அழகுற வடிவமைத்துக் கொடுத்த S.P.M பிறின்ரேர்ஸ் நிறுவனத்தினருக்கும் இன்றைய தினம் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியையிலும், மதியபோசனத் திலும் கலந்து கொண்டவர்களுக்கும், உதவிகள் நல்கிய அனைவருக்கும் எமது உளபூர்வமான மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தென்னிங்கவத்தை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.




அன்புடன்
-குடும்பத்தினர்-

அச்சமைப்பு: S.P.M, வி.எம்.றோட், பருத்தித்துறை.T.P: 0774966997, E.mail: puvan2009@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்"



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

அச்சமைப்பு: S.P.M, வி.எம்.றோட், பருத்தித்துறை. T.P.No: 021 2260055, 0774966997
E.mail: puvan2009@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org